DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 373/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.4 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாமிநாதன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சின்னப்ப கவுண்டர் | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலுக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 18.06.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் ஜல்லிபட்டியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். நான் ஜல்லிபட்டியில் பஞ்சாயத்துதலைவராக பொறுப்பில உள்ளேன். 26.06.2013 ம் தேதி எங்களது பக்கத்து தோட்டத்து காரர் கனகராஜ் என்பவர் போன் மூலமாக தகவல் கூறினார். விஸ்வநாதன் என்பவர் மயில்சாமி என்பவரை சொத்து பிரச்சனையாக குச்சியால் அடித்ததாக கூறினார். நானும் கனகராஜும் அன்று இரவு தோட்டடத்திற்கு சென்றோம். நாங்கள் மயில்சாமியை உடுமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சையி சேர்த்தோம். ஒரு வார காலம் சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. உங்கள் தோட்டத்தின் பக்கத்தில் விஸ்வநாதன் தோட்டம் இ ல்லை என்றால் ஆமாம். உங்கள் தோட்டடததிற்கு பக்கத்தில் விஸ்வநாதன் மற்றும் அவர் மனைவி இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் அது தவறு என்றால் ஆமாம் கனகராஜ் தான் இருந்தார். கனகராஜ் உங்களை எங்கு அழைத்து சென்றார் என்றால் பூலாங்கிணறு. அவர் தோட்டம் பூலாங்கிணற்றில் தான் உள்ளது

என்றால் ஆமாம். மயில் சாமி உங்களை அழைக்கவில்லை என்றால் ஆமாம். நீங்கள் போகும் போது யார் யார் அங்கு இருந்தார்கள் என்றால் விஸ்வநாதன் மற்றும் அவர் மனைவி மற்றும் மகன் இருந்தார்கள்.

2. யார் அடித்ததாக மயில் சாமி சொன்னார் என்றால் விஸ்வநாதன். நீங்கள் அடித்ததை நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம் போகும் போது குச்சி வைத்திருந்தார். எவ்வளவு பெரிய குச்சி என்றால் முழங்கை அளவு வரும். 2 ½ அடி வருமா என்றால் வரும். நீங்கள் பார்க்கும் போது மயில்சாமிக்க அடிப்பட்டிருந்தா என்றால் மொக்கை காயம் இருந்தது. மயில் சாமி மனைவிக்கு காயம் இல்லை என்றால் நான் பார்க்கவில்லை கூட்டமாக இருந்தது. எந்த வண்டியில மருத்துவமனைக்கு அழைத்து சென்றிர்கள் என்றால் ஆம்னி வண்டி. மருத்துவமனைக்கு உடன் சென்றிர்களா என்றால் ஆமாம்.

3. மயில் சாமி என்ன உறவு என்றால் கனகராஜ்ன் சொந்தம். கனகராஜ்க்கு நீங்கள் சொந்தம் என்றால் ஆமாம். சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவ நடைபெறவில்லை என்றாலும் கனகராஜ் உங்கள் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றாலும் சரியல்ல. உங்கள் தோட்டம் ஜல்லிபட்டியிலும் விஸ்வநாதன் தோட்டம் பூலாங்கிணற்றில் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அது தவறு என்றாலும் விஸ்வநாதன் தோட்டம் எங்குள்ளது என்பது தெரியாமல் அருகில் உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.